உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௯.]	விஷு ௵ பங்குனி ௴	[பகுதி-௫.
Vol. 39.	**March—April 1942.**	**No. 5.**

உள்ளுறை.

கம்பராமாயண சாரம்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.	௨௨௫—௨௪௦
திருப்புல்லாணிச் சேதுநாயகர்மீது சிந்து :—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	௨௪௧—௨௪௫
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:—		௨௪௬—௨௪௮
ஆராய்ச்சியின் ஆராய்ச்சி பற்றிய குறிப்பு :—	ஸ்ரீ. ராவ்சாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G B.V.C.	௨௪௯
சேதுநாதர்பேரில் விண்ணப்பம்:—	T. K, இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.	௨௫௦—௨௫௧
இராமசேயம்:— (உத்தரகாதை)	ஷை.	௨௯௦—௨௯௪
மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு :—		

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1942.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	*தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	*ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ
கடவுள் துணை.
செந்தமிழ்.
தொகுதி—௩௯.] விஷு ஞு பங்குனி மீ [பகுதி—ரு.
Vol. 39. March—April 1942. No. 5.

கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

உ0C-ஆம் பக்கத் தொடர்ச்சி.

மாண்ட இராவணன் வதனமலர்ச்சி

அரக்கரினமான மலைக்குச் சிகரம்போன்றவனான இராவணனுடைய தலைகள், கண்களினின்றும் கோபாக்கினியும் இரத்தவெள்ளமும் பொங்காநிற்க, முகங்கள் தரையிற் படியக் குப்புற வீழ்ந்தன.]

194 வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க மனமடங்க
வினையம் வீயத்
தெம்மடங்கப் பொருதடக்கை[1]ச் செயலடங்க மயலடங்க[2]
வாற்றல் தேயத்
தம்மடந்த முனிவரையுந் தலையடங்க[3] நிலையடங்கச்
சாய்த்த நாளின்[4]
மும்மடங்கு பொலிந்தனவம் முறைதுறந்தா னுயிர்துறந்த
முகங்க ளம்மா.

கொண்டுகூட்டு: அ முறைதுறந்தான் (இராவணன்) உயிர்துறந்த முகங்கள், வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க, மனம் அடங்க, வினையம் வீயத், தெம்மடங்கப்பொரு தடக்கைச்செயல் அடங்க, மயல் அடங்க, ஆற்றல் தேய, தம் அடங்கு முனிவரையும் தலை அடங்க நிலைஅடங்கச் சாய்த்த நாளின் மும்மடங்கு பொலிந்தன அம்மா!

பொருள்: உயிர்நீங்கிய அந்த இராவணன்முகங்கள்,—'கொடிய சிங்கம்' கோபித்தாற்போன்ற (அவனுடைய) கோபம் அடங்கவும், மனம் ஒடுங்கவும், வஞ்சனை யொழியவும், பகைவரடங்கும்படி போர்புரிகின்ற புயங்களின்செயல்கள் ஓயவும், வலிமை தேயவும், (சீதைமீதுகொண்டதும் உயிர்போமளவும் சாயாததுமான) மயல் சாயவும், (மரணம்நேர்ந்தும், அவன், உலகத்தையெல்லாம் அடங்கச்செய்தலினுங் கட்டசாத்தியமான) தம்மையடங்கச்செய்தல் வல்லரான முனிவரையும் தலைமையும் நிலைமையும் சாயச்செய்த (அந்த வெற்றிக்) காலத்(திற் பொலிந்த)தினும் மூன்றுமடங்கு (அதிகமாகப்) பொலிந்தன.

வெம்மை - கொடுமை. மடங்கல் - சிங்கம். வெகுளல் - கோபித்தல். சினம் - கோபம். வினையம் - வஞ்சம். வீதல் - நீங்குதல். 'தெவ் மடங்குதல்', சந்தியால் 'தெம்மடங்க'லானது. தெவ் - பகை; பகைவர்; போர். தெவ்+முனை; தெம்முனை (போர்க்களம்) எனவும், தெவ்+(பகை) மன்னர், தெம்மன்னரெனவும் வருதலுண்டு. பொருதல் - போர்செய்தல். தடம் - விசாலம். ஆற்றல் - வலிமை. தம் அடங்கு என்பதில் 'அடங்கு' என்ற தன்வினை பிறவினைப்பொருள்தந்துநின்றது. தம் (-மூச்சு, தமிழகராதி). அடக்குதல் - யோகமுறையில் கும்பித்தலென்னும் மூச்சடக்குதலையும் குறிக்கும். துறத்தல் - கைவிடுதல்; நீங்குதல்.

'மகாவீரனாதலால், இறக்கும்போது முகப்பொலிவு மிக்கதென்க. அம்மா என்பது அங்ஙனம் பொலிந்தமைக்கு வியந்தமையைத் தெரிவிக்கும்' வை. மு. கோ.

பாடபேதம்: [1] பொருந்தடங்க. [2] மயலடங்கா. [3] தலையடங்கு, தலையடங்கா. [4] சாய்ந்தவேனும், சாய்த்தவேலும்.

இறந்த இராவணனுடலை இராமன் பார்த்தல்

[அப்போது, இராமன், 'தேரைப் பூமியிலிறக்குவாயாக' என மாதலி அவ்வாறுசெய்தான். அவரவர் தியானிக்கும்வடிவமாய் அவரவர்க்கு அருள்செய்து அறம்வளர்க்கும் திருமாலான

இராமன், இரத்தவெள்ளத்திலே கிடந்த இராவணன்மேனிமுழுவதையும் கண்டான். கண்டவன், மாதலியை, இந்திரரதத்தை விண்ணுலகுக்குக் கொண்டுபோம்படி சொல்லியனுப்பிவிட்டுத் தம்பியுடனும் படைத்தலைவருடனும் தரையில் நடந்து, தூரத்திலிருந்து தூலமாகப்பார்த்த இராவணனுடல்முழுவதையும் அண்மையிற் சென்று நுண்மையாக நோக்கினான்.

இராவணன் முதுகுத்தழும்புகளைக் கண்டு இராமன் நாணுதல்.

இராவணன்முதுகிலே தோளணிமாலை பிறைபோலவும் திசையானைக்கொம்புகள் துளைத்த புண்களின் தழும்புகள், அந்த மாலையையடுத்துக் காணப்படுபவை, அந்தப்பிறையினின்று நீங்கிய களங்கம்போலவும் விளங்குவதை இராமன் கண்டான். கண்டவன், விபீடணனைநோக்கி, 'திரிலோகங்களையும் செயித்த இராவணனைச் செயித்தேனென்ற புகழ், பகைவனுக்குப் பயந்து புறங்காட்டியோடிப் பகைவராயுதம்பட்ட முதுகுத்தழும்புடையவனைத்தான் இராமன் வென்றானென்று பரிகசித்தற்கிடமாய்ப் பழுதுபட்டது. இவன் கார்த்தவீரியார்ச்சுனனால் தோல்வியுற்றுக் கட்டுண்டவனென்று முன்னமே நான் அடைந்துள்ள நாணத்தை இவன் முதுகுத்தழும்புகள் அதிகப்படுத்துகின்றன. புறங்காட்டுதல் பழியாகுதல்போலப் புறங்காட்டியவனை வெல்லுதலும் புகழாகாது பழியேயாம்' என்று கூறினான்.

விபீடணன், இராவணன்முதுகுத்தழும்புகளின் உண்மைக்காரணத்தை உரைத்தல்

இவ்வாறு இராமன் கூறக்கேட்ட விபீடணன், (அநியாயமாகத் தன் அருமைத்தமையன் பழிக்கப்பட்டதற்கு வருந்தி) அருவிபோலக் கண்ணீர்பெருகுகின்ற கண்களையுடையவனாய், வெய்ய பெருமூச்சுடையவனாய்ப் பொருமிப் புழுங்குகின்ற நெஞ்சினனாய்ச் 'செம்மையல்லாத வார்த்தைகளைச் செப்பாயாக; என் அண்ணன்

அக்காலத்தில் தேவசாபகாரணத்தினால் கார்த்தவீரியார்ச்சுனனாலும் வாலியினாலும் வெல்லப்பட்டான். இக்காலத்தில் சீதாதேவி மீதே வைத்த காதலான நோயாலும் உன் கோபமான தீயாலும் கொல்லப்பட்டான். வேறே அவனை வெல்லவல்லாரெனச் சொல்லற்பாலார் எவரும் இல்லை.]

195 நாடுள தனையு முற்று[1] நண்ணலார் காண்கி லாமற்[2]
பீடுள குன்றம் போலும் பெருந்திசை[3] யெல்லை யானைக்[4]
கோடுள தனையும் புக்குக் கொடும்[5]புறத் தழுந்து புண்ணின்[6]
பாடுள தன்றித் தெவ்வர்[7] படைக்கலம் பட்டென் செய்யும்.

கொண்டுகூட்டு: நாடு உள தனையும் உற்று, நண்ணலார் காண்கிலாமல், பீடுள குன்றம்போலும் பெருந்திசை யெல்லை யானைக்கோடு உளதனையும் புக்குப் புறத்து அழுந்து கொடும்புண்ணின்பாடு உளது. அன்றித் தெவ்வர்படைக்கலம் பட்டு என்செய்யும்?

பொருள்: (இராவணன், வெல்லுதற்கு) நாடுகள் இருந்தமட்டும் (ஒவ்வொருநாட்டுக்கும்) சென்று, (அங்கங்குள்ள பகைவரனைவரையும் வென்று, மேற்கொண்டு எதிர்தற்குப்) பகைவர் காணப்படாமையால் (இவைகளை யெதிர்ப்பேனாகவென்று பெரிய மலைகள்போன்ற திசையானைகளை யெதிர்க்கத் தாமும் எதிர்த்து மார்பிற்பாய்ந்த அந்தத்) திசையானைகளின் கொம்புகள் (எத்தனையுண்டோ, அத்தனையும்) புகுந்து முதுகின் (வழியாக வெளியே போம்படி) அழுந்திய புண்களின் தழும்பு (இவன் முதுகில்) உள்ளது. (இவ்வாறாக, இவன் முதுகுத்தழும்புகளுக்குக் காரணம் திசையானைக்கொம்புகளே) அன்றி(ப் பகைவர்படைக்கலங்கள் அன்று). பகைவர்படைக்கலங்கள் (இவன் வச்சிரதேகத்திற்) பட்டு யாதுசெய்யமாட்டும்? (ஒன்றும் - ஓர் ஊறும் - செய்யமாட்டா என்றவாறு.

நண்ணலார் - பகைவர். பீடு - பெருமை. கோடு - கொம்பு. புக்கு - புகுந்து. புறம் - முதுகு. புறத்து அழுந்து கொடும் புண் என இயையும்.

புண்ணின்பாடு - புண்ணினுற்பட்டது - புண்ணினுலுண்டானது; தழும்பு என்ற பொருள்குறித்தது. தெவ்வர் - பகைவர்.

'காண்கிலாமல்' என்ற செய்வினை, 'காணப்படாமல்' என்ற செயப்பாட்டுவினைப்பொருள்பட நின்றது. திசையானைக்கொம்புகள் படைக்கலங்களினும் அதிக வலிமைபடைத்தவையென்பது குறிப்பு.

பாடபேதம்: [1] ஓடி. [2] நலிந்தநா ளரிமுன்னுக, நவின்றநா ளரிமுன்னுக. [3] மாடுள தனையு முற்றும் வவ்வின. [4] வலியினுனே. [5] கொழும். [6] எழுந்த புண்கோட்; தழும்புண்கொண்ட, அழுந்தும் புண்ணின். [7] இவன்மேற் றேவர்.

[அந்தத் திசையானைக்கொம்புகள், (அந்த யானைகளாற் பிடுங்க முடியாமல் முறிந்தவை,) இவன்மார்புக்கு ஆபரணமாக விளங்கின. அவை, இவனுக்கும் அனுமானுக்கும் நேர்ந்த தொந்தயுத்தத்தில், அனுமான் கைக்குத்தினுற் கழன்றுபோயின. திருமால் முதலிய யாவரும் இவனுல் ஏற்படுந் துன்பம் என்று தீருமென்று வருந்துகின்றூர்கள். இவன் இன்று உன்னுல் இறந்தானென்பதைக் கேட்டால், (இராவணன் சாதல் அசம்பாவிதமென்ற உறுதியுடைய) அவர்கள், அதன் பொருள் தெரியமாட்டாதவராய், அது பொய்யென்பார்கள்'* என்று கூறினுன்.

இராவணனுக்குச் சாச்சடங்கு செய்யும்படி இராமன், விபீடணனுக்குக் கட்டளையிடல்

இவ்வாறு விபீடணன்கூறியதைக் கேட்ட இராமன், 'இராவணன்முதுகுத்தழும்புகள் இவ்வாருகவா உண்டாயின' என்று கூறி, முன் தான்கொண்ட ஐயமும் நாணமும் நீங்கித் தான்

---

* ....பரம்பரன் முதல பல்லோர்
என்றியா மிடுக்கண் டீர்வ தென்கின்றூர் இவனின் றுன்னுற்
பொன்றினுன் என்ற போது புலப்படார் பொய்யே யென்பார்.

பரம்பரன் - முதற்கடவுள். முதல - முதலாகவுடைய. இடுக்கண் - துன்பம். பொன்றுதல் - சாதல். புலப்படுதல் - தெரிதல்.

அடைந்த வெற்றி உண்மையாகப் பெருமைபாராட்டுதற்குரிய தென் றெண்ணி மகிழ்ந்து, 'விபீடணு, சாவுவரையிலுந்தான் பகைமை. இவன் இறந்ததோடு இவன்மீது நாம் கொண்டிருந்த பகைமையும் இறந்ததாகக்கொள்ளல் தக்கது. இனி இவனுக்கு நீ ஈமக்கடனைச்செய்வாயாக' என்று பணித்துவிட்டு, இராவணனைக் கொன்றதற்கு மகிழ்வுற்று நன்றிகூறித் துதித்துத் தொழுதற்கு வந்த தேவர்களைக் காணச்சென்றான்.

விபீடணன் இராவணன் இறந்ததற்கு இரங்கல்

மலைமேல் மலைவிழுந்தாற்போல, விபீடணன் இராவணன்மேல் விழுந்து, (ஏனையோர்கிடக்க,) இராவணனால் துன்புற்ற தேவர் முனிவர் முதலிய யாவரும் இரங்கும்படி, வாய்விட்டு அலறிக் கதறி யழுதான்.

196 உண்ணாதே[1] யுயிருண்ணா தொரு[2]நஞ்சு[3] சனகியெனும்
பெரு[4]நஞ் சுன்னைக்[5]
கண்ணாலே நோக்கவே போக்கியதே[6] யுயிர்நீயுங்[7]
களப்பட் டாயே
எண்ணாதே[8] னெண்ணியசொ லின்றினித்தா னெண்ணுதியோ[9]
வெண்ணி லாற்றல்
அண்ணாவோ அண்ணாவோ வசுரர்கடம்[10] பிரளயமே
யமரர் கூற்றே.

கொண்டுகூட்டு: அளவு இல் ஆற்றல் அண்ணாவோ! அண்ணாவோ!! அசுரர்கள்தம்பிரளயமே! அமரர்கூற்றே! ஒரு நஞ்சு, உண்ணாதே உயிர் உண்ணாது. சனகியெனும் பெருநஞ்சு கண்ணாலே நோக்கவே உன்னை உயிர் போக்கியதே! நீயும் கள(த்து)ப்பட்டாயே! எண்ணாதேன் எண்ணியசொல் இன்று இனித்தான் எண்ணுதியோ?

பொருள்: அளவற்ற ஆற்றலுடைய அண்ணாவோ! அண்ணாவோ!! அசுரர்பிரளயமே! அமரர்கூற்றே! (எந்த) ஒருநஞ்சும், உண்ணப்படாமல், உயிரைக் கொல்லமாட்டாது. (அவ்வாறாக,)

சீதையென்னும் பெருநஞ்சு, (நீ வாயினால் உண்ணாமல்) கண்ணாலே பார்க்கவே, உன்னை உயிர்நீங்கச்செய்ததே! (இது ஆச்சரியமும் பரிதாபமுமானது. வீரரெல்லாரினும் சிறந்தவீரனான) நீயும் (ஏனைய் சாதாரண வீரர்போல, அந்தோ!) படுகளத்திலே பட்டு விட்டாயே! (இதுநிற்க.) (இராமன்மகிமையைச் சுதாவாக) மதித்தறியாதிருந்த யான் (ஈசுரப் பிரேரணையால் அவன் பரம்பொருளென்று) மதித்தறிந்து (சீதையை அவனிடம் சேர்த்துவிடென்று) சொல்லிய புத்திமதியை (அவனை நீ அறியாத அப்போது அவன் ஆற்றலை எண்ணினாயில்லையாயினும் அறிந்த) இப்போதாவது எண்ணுகின்றாயோ?

உண்ணாதசோறு என்பதில் 'உண்ணாத' என்பது, 'உண்ணப்படாத' எனப் பொருள்படுதல்போல, 'உண்ணாதே' என்பது 'உண்ணப்படாமலே' என்ற பொருள்படநின்றது. உயிருண்ணுதல் - உயிரைப்போக்குதல் - கொல்லுதல். சனகி - சனகன்மகள் - சீதை. களப்படுதல் - களத்திற்படுதல் - போர்க்களத்திற் சாதல். எண்ணுதல் - மதித்தல் (தமிழகராதி). இனி - இப்போது. இனித்தான் - இப்போதாவது. சொல் - புத்திமதி. 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' (தமிழகராதி). ஆற்றல் - வலிமை. எண் இல் ஆற்றல் - கணக்கிடமுடியாத (அளவற்ற) வலிமை. பிரளயம் - (உலகத்துயிர்களெல்லாம் இறக்கநேரும்) கற்பமுடிவு. அசுரர்கள்தம் பிரளயமே - (கற்பமுடிவு எல்லா உயிர்களையும் ஒழித்தல்போல) எல்லா அசுரர்களையும் ஒழிப்பவனே. கூற்று - எமன்.

'உண்ணாதே உயிருண்ணும் ஒரு நஞ்சு சனகியெனும் பெருநஞ்சு' என்ற பாடத்துக்கு, (நஞ்சு உண்ட பிராணிகளைக் கொல்லும். பிராணிகளால்) உண்ணப்படாமலே (அவைகளைக்) கொல்லும் ஒரு நஞ்சு (உளதானால், அந்த நஞ்சாகிய) சீதையெனும் பெருநஞ்சு என்ற பொருள் கொள்ளலாம்.

உண்டாரைக் கொல்லும் நஞ்சினுங் கண்டாரைக் கொல்லும் நஞ்சு பெருமையுடையதென்பது குறிக்கப் 'பெருநஞ்சு' என்றான்.

'பெருநஞ்சு உன்னைக் கண்ணாலே நோக்கவே போக்கியதே உயிர்' என்பது, 'பெருநஞ்சு, (அதனை நீ வாயால் உண்ணாமல்) கண்ணாலே நோக்கவே

உன்னை உயிர்போக்கியதே' என இயையும். ஏகாரங்கள் ஐந்தில், முந்திய மூன்றும் இசைநிறை; பிந்திய இரண்டும் இரக்கக்குறிப்பு.

பாடபேதம்: [1] உண்ணுத. [2] உண்ணவொரு, உயிருண்ணுவொரு, உண்ணுமொரு. [3] மருந்து. [4] ஒரு. [5] உன்றன். [6] போகியதே; போக்கினுய். [7] நீயுயிருங். [8] எண்ணுதே. [9] எண்ணுதியே. [10] அசுரர்கடற். 'உண்ணு நஞ்சுயிருண்ணு வொரு............நஞ்சுன்னை' என்று ஒருபிரதியில் முதலடி.

[பிறன்மனைவியை விரும்புதல் தீராத பழிவிளைக்குமென்று நான் சொல்லியபோது என்னைக் கோபித்த கோபம் இப்போது ஆறிவிட்டதோ? தீராத பேராசை, இராக்கதரெல்லாரும் செத்தொழிந்த இப்போது தீர்ந்ததோ? நீ வலிந்து புணர முயன்றபோது, 'மனம் இணங்காத எவளையேனும் தொட்டாயானுல், இறப்பாயாக' வென்று சாபமிட்டுத் தீயில்விழுந்து தேகத்தைநீத்த வேதவதியே சீதையாகப் பிறந்திருக்கின்ருள். அவளைக் காதலித்தலொழிவாயாக'வென்று நான் கூறியதை மனத்துட் கொண்டாயில்லை. அதனுல், நீ ஒருவனேயன்றி உன்குலத்தாரெல்லாரும் சாகச்செய்திட்டாய். இராமன் சர்வேச்சுரனென்பதை இதன்முன் னறிந்தாயில்லை. பிரமனும் பரமனும் அருளிய பல வரமும் நிலைபேறின்றி உன்னுயிரோடொழிந்த இப்போதறிந்தாயே! (மற்றைப் பத்தருக்குப் பத்துமடங்கான தலைகளும் கைகளுமுடைய நீ) இராமபிரானைப் பத்துத் தலைகளாலும் இருபதுகைகளாலும் வணங்கி ஒருபதுநாவால் அவன் திருநாமத்தை உச்சரித்து முத்தித்திருமகளை யடையாமல் (மதியீனனுய்ச் சீதையை நாடி) இலங்காராச்சியத்தோடு உயிரையும் இழந்தாயே! வீரசுவர்க்கம் மேவினுயோ? பிரமலோகவாழ்வு பெற்ருயோ? கைலாசவாசியானுயோ? (எந்தப் பதவியை அடைந்தாய்? இயம்புவாயாக. எமனும் அஞ்சும்) உன்னுயிரை, அண்ணு, யார் கொண்டுபோனுர்? இனி மன்மதனுர் உன்பால் வலிசெலுத்த வல்லரல்லாரானுரே! சந்திரன் உன்னை வெதுப்பலொழிந்து குளிர்ச்சியடைந்தானே! உன் மைத்துனனுன தன் கணவனை நீ கொன்ருயென்பதுகுறித்து உனக்குக் கொடுமைசெய்யச் சூழ்ச்சி

செய்வாளாய்ப் (பழிவாங்கக்கருதிய) பல்லாலே உதட்டைக்கடிக்கும் படுபாவியான சூர்ப்பனகை (சீதைமீது உனக்கு மோகமூட்டி இராமனை உனக்குப் பகையாக்கி உன்னைக் கொல்லச்செய்து) பழி தீர்த்துக்கொண்டாளே! (மைத்துனனே பகைவனான) உனக்கு நல்லாரும் தீயாரும் நரகலோகத்தாரும் சுவர்க்கலோகத்தாருமான எல்லாரும் பகைவரே. (எல்லாரும் அஞ்சும் வலியனாயிருந்த நீ, இப்போது ஆரும் அஞ்சாராகும்படி, எல்லாருக்கும்) எளியனாயினாயே! விசயமகளையும் கலைமகளையும் புகழ்மகளையும் தழுவிய உன் தோள்கள் (அந்த மூன்றுமகளிரும், தங்களைத் தழுவிய தோள்கள் வேறோர்மகளைத் தழுவுவதோ? என்று) பொறாமை மிகும்படியாகச் சீதையைத் தழுவுவதற்கு (விரும்பி, அதனால்) உயிரைக்கொடுத்துப் பழியைக்கொண்ட பைத்தியக்காரனே! திசையானைக்கொம்புகளை ஒடித்த வலிய பெரிய மார்பினால் (உன்னை விரும்பிய மாதரைத் தழுவாமல்) தரைமகளைத் தழுவினாயே'*

---

* போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத் தழுவியகை பொறாமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந் தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவா னுயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ திசையானை மருப்பிறுத்த பணைத்த மார்பால்.

போர்மகள் - விசயலட்சுமி. கலைமகள் - சரசுவதி. கூர - மிக. சீர் - சிறப்பு. கற்பின் - கற்பினையுடைய. பேர்மகள் - கீர்த்தி (உடைய) மாது. தழுவுவான் - தழுவுவதற்கு. பின்னை - (இறந்த) பின்பு. பார்மகள், இங்கே தரையைக் குறித்தது. மருப்பு இறுத்த பணைத்த மார்பு - கொம்புகளை ஒடித்த பெரிய மார்பு.

'பொறாமைகூர' என்பதற்கு, (போரிலும் கல்வியிலும் புகழிலும் சிறந்த இராவணனை விரும்பியடைந்துள்ள போர்முதலிய மூன்றுக்கும் அதிதேவதைகளான விசயமகள் முதலிய முத்தேவியரும் 'இவன் பிறன்மனைவியை விரும்புதலாகிய பெரும்பாவஞ்செய்வானானானே! அதனால் அழிந்து போவானே' யென்று மனம் வருந்துதலைப்) 'பொறுக்கமாட்டாமை மிக' என்றும் பொருள்கூறலாம்.

உயிரைக்கொடுத்துப் புகழைப்பெறுதல் அறிஞர்செயல். அதற்கு நேர் மாறாக, இராவணன் உயிர்கொடுத்துப் பழியைப்பெற்றானதலால், அவனை 'உயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா' என விளித்தான்.

என்று வாய்விட்டுக் கதறிக் கிடந்தான். அவனைச் சாம்பவான் வாரி யெடுத்து 'விதியின் தன்மையை அறிந்த நீ இவ்வாறு வருந்துதல் தகா'தெனத் தேற்றினன்.

மண்டோதரிமுதலிய மாதர் இராவணன்மேல் வீழ்ந்தழுதல்

'இராவணனை மறந்துவிடுவது பிறகு நினைப்பது என்பது இல்லாமல் எப்போதும் அவனைக் கருத்திற்கொண்டிருப்பவ'*ளாதலால், அவனை 'நினைந்ததும் மறந்ததும் இலாதநெஞ்சின'†ளான மண்டோதரி, அவன் இறந்தானென்பதைக் கேட்டு, அநந்தனூருயிரம் அரக்கமாதர் கூந்தலை அவிழ்த்து விரித்துக்கொண்டு, வாய்விட்டுக் கதறியழுது சூழ்ந்துவர, இராவணன்கிடக்குமிடத்துக்குப் போகப்புறப்பட்டாள். வாய்விட்டுக் கதறி அரற்றும் ஒலி இடிமுழக்கம்போல, ஆபரணங்கள் மின்னல்போல, கண்ணீர்த்தாரைகள் மழைத்தாரைகள்போலக் கரிய பெரிய மேனி கார்மேகம்போல ஆகச் சில அரக்கியர், ஆகாயவழியாகச்சென்றூர்கள். (சென்றவர்கள், கார்மேகங்கள் கடலிற் படிதல்போல, இராவணன்மேல் விழுந்தார்கள்.) இராட்சசிகள் சிலர் அவன் தலைகள்மேலும், சிலர் தாள்கள்மேலும் சிலர் தோள்கள்மேலும் சிலர் மார்புமேலுமாக விழுந்து அவனுடலைப் பங்கிட்டுக்கொண்டார்போன்று தழுவியழுதனர்.

இராவணனோடு கலத்தலின்பமும் புலத்தற்றுன்பமுமல்லாத எத்தகைய இன்பதுன்பங்களையுமறியாத அந்த அரக்கியர், ஒருவர் மேலொருவராக உயிரைத்தழுவுதல்போல, அவனுடலைத் தழுவினூர்கள். அரக்கியரும், இயக்கியரும், நாகலோகமாதரும், சித்தலோகமகளிரும், வித்தியாதரமங்கையருமான இராவணன் காதலியரெல்லாரும், அவனுடலைத் தழுவிச் சோர்வுமேலிட, 'நீ, (எங்களைக் கவனிக்கின்றூயில்லையே!) தருமம் அழிய உன்மனத்துள் வைத்த சீதையை இப்போதும் மறக்கவில்லையோ! எங்களுக்கு (ஒருவார்த்தைசொல்லத்) திருவாய்மலர் திறக்கின்றூயில்லை. (எங்களை ஒருமுறை பார்க்கக்) கண்விழிக்கின்றூயில்லை. (வேறு எவ்வாறுகவும்)

---

* வை. மு. கோ. † உஉஅ-ஆம் பாட்டின் ஈற்றடி.

அருளுகின்றாயில்லை. (எங்களைப் புறக்கணித்தற்குக்காரணம், சீதையை மறவாமையாயில்லாமல், மரணமாயிருக்கும்போதும்! அந்தோ!) இறந்தேபோனாயோ!' என்று பரிதாபமாகப் பிரலாபித்தார்கள்.*

மண்டோதரி இராவணன்மேல்விழுந்து புலம்பல்

கருங்கடலில் மின்னல் விழுந்தாற்போல, இராவணன்மேல் மண்டோதரிவிழுந்து மரங்களும் மலைகளும் உருகும்படி வாய்விட்டு அழுது புலம்புவாளானாள்.

197 அன்னேயோ வன்னேயோ[1] வாகொடியேற் கடுத்தவா[2]
றாக்கர் வேந்தன்
பின்னேயோ[3] விறப்பதுமுன்[4] பிடித்திருந்த[5] கருத்ததுவும்[6]
பிடித்தி லேனே[7]
முன்னேயோ[8] விழுந்ததுவு[9] முடித்தலையோ[10] படித்தலைய[11]
முகங்க டானே[12]
என்னேயோ வென்னேயோ[13] விராவணனு ரிறந்தபரி[14]
சிதுவோ பாவம்.

கொண்டுகூட்டு: அன்னேயோ! அன்னேயோ! ஆ! கொடியேற்கு அடுத்தவா(று)! (நான்) இறப்பது அரக்கர்வேந்தன்பின்னேயோ! முன் பிடித்திருந்த கருத்ததுவும் பிடித்திலேனே! ஓ என்முன் விழுந்ததுவும் (இராவணனுருடைய) முடித்தலையோ! படித்தலைய (இராவணனுருடைய) முகங்கடானே! இராவணனுர் முடிந்தபரிசு என்னேயோ! என்னேயோ? ஓ! இது பாவம்!

பொருள்: அம்மாவோ! அம்மாவோ!! ஆ! கொடிய பாவியேற்கு நேர்ந்ததன்மை (என்னே!) (நான்) இறப்பது, இராக்கதராசன் (இறந்த) பின்னேயோ! (என் நாயகனுக்குச் சாவுநேர்வதாயிருந்தால், அவன் மாயுமுன் என்னை மாய்த்துக்கொள்வேனென்று)

---

* அறந்தொலை வுறமனத் தடைத்த சீதையை
மறந்திலை யோ? இனும் எமக்குன் வாய்மலர்
திறந்திலை! விழித்திலை! அருளும் செய்கிலை!
இறந்தனை யோ! என இரங்கி ஏங்கினர்.

'அருளும்' என்பதில் உம்மை இசைநிறை.

முன் உறுதியாகக் கருதியிருந்த கருத்தை (நிறைவேற்றாது நெகிழ) விட்டிட்டேனே! ஓ என்முன்னே விழுந்துகிடப்பதும் இராவணனுருடைய முடித்தலையோ! பூமியின்கட் (பதிந்து) கிடப்பன இராவணனுருடைய முகங்களோ! (தேவாதியர் பயந்து பாதம்பணிய மகோன்னதபதவியில் வாழ்ந்த) இராவணனார் (பருந்துகளும் காகங்களும் பயப்படாது மொய்க்கும்படி படுகளத்திலே) முடிவடைந்தவகையை என்னென்பேன்! என்னென்பேன்!! ஓ! இந்த முடிவு பரிதாபமானது!!

அன்னை - தாய். அன்னே, அன்னையென்பதன் விளி; அம்மா என்பது போன்ற இரக்கக்குறிப்புச்சொல்; இங்கே தாயே என்ற பொருள்குறியாது, இரக்கப்பொருள் குறித்தது; துன்பத்தால் தாயைநினைந்து விளித்ததாகவுங் கொள்ளலாம். ஓ, ஆ, பாவம் மூன்றும் இரக்கக்குறிப்புச்சொற்கள். ஆறு - தன்மை (தமிழகராதி). 'அடுத்தவாறு', 'அடுத்தவா' எனத் தொக்குநின்றது. பிடித்தல்-உறுதியாகக்கொள்ளுதல் (தமிழகராதி.) முடி - கிரீடம். படி - பூமி. தலை - இடம். பரிசு - விதம். (தமிழகராதி.)

முகங்கடானே என்பதில் தான் என்பது அசைச்சொல்.

'இதுவோபாவம்' என்பதற்கு 'இதுவோ மிக்க பாவத்தின் விளைவு' என்று பொருள்கூறலு முண்டு.

பாடபேதம்: [1] அன்னையோ வன்னையோ. [2] ஆகொடியோர்க் கென்னேநான், அறக்கொடியோர்க் கடுத்ததுதான், ஆகொடியேற் கடுத்தநாள், ஆகொடியேற் கடுத்ததுதான், ஆகொடியேற் கடுத்ததுமிவ். [3] பின்னையோ. [4] இருப்பதுமுன். [5] பிடித்திருந்தன். [6] மனக்கருத்தும். [7] பெற்றிலேனே, பெற்றிலேனே, பிடிக்கிலேனே. [8] முன்னையோ. [9] இரப்பதுவும், இறப்பதுவும், விழுந்ததிவன். [10] முடித்தொகையோ. [11] கரத்தொகையோ, படித்தலையே. [12] முகங்காட்டானே, முகங்காட்டாயோ. [13] என்னையோ வென்னையோ. [14] முடிந்ததுவும், கிடந்தபரிசு.

198 வெள்ளெருக்கஞ் சடை[1]முடியான் வெற்பெடுத்த திருமேனி
மேலுங் கீழும்
எள்ளிருக்க மிடமின்றி யுயிரிருக்க மிடநாடி
யிழைத்த[2] வாறே

கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை மனச்சிறையிற்[3] கரந்த[4] காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி[5] யுடல்புகுந்து தடவியதோ[6] வொருவன் வாளி.

கொண்டுகூட்டு: ஒருவன்வாளி, வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பு எடுத்த திருமேனி மேலும் கீழும் எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி இழைத்த ஆறோ? கள் இருக்கும் மலர்க்கூந்தற் சானகியை மனச்சிறையிற் கரந்த காதல் உள்ளிருக்குமெனக்கருதி உடல்புகுந்து தடவியதோ?

பொருள்: (ஆ! இராவணன் திருமேனிமுழுதுஞ் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டிருக்கின்றதே! இதன்காரணம்,—) இராமன் அம்புகள் இராவணனுடம்புள்ளேபுகுந்து வெள்ளெருக்கு மலரணிந்த சடைமுடியுடைய சிவபெருமான் (வீற்றிருக்கும் கைலாச)மலையை (அப்பெருமானோடுசேர்த்துத் தூக்கி)யெடுத்த திருமேனியின் மேலும் கீழும் (இடுப்புக்கு மேலும் கீழும் என்றபடி) எள்ளளவிடமும் விடாமல் உயிரிருக்குமிடம் (எங்கேயென்று) தேடிப்பார்த்ததோ? தேனுள்ள மலர்மாலையணிந்த கூந்தலையுடைய சீதையை மனச்சிறையில் ஒளித்துவைத்திருக்கும் காதல் உள்ளே (எங்கேயாவதிருக்குமென்று) தடவிப்பார்த்ததோ?

வெற்பு - மலை. இழைத்த - செய்த. ஆறு - தன்மை (தமிழ்ச்சொல் லகராதி); விதம் (தமிழகராதி). கள் - தேன். சானகி - சனகன்மகள் - சீதை. சிறை - சிறைச்சாலை. கரத்தல் - மறைத்தல் - ஒளித்தல். வாளி - அம்பு.

பாடபேதம்: [1] வெள்ளெருக்கின்மலர், வெள்ளெருக்குமலர். [2] நுழைந்த. [3] கடுஞ்சிறையில், கடுந்துயரில். [4] வைத்த. [5] என்றெண்ணி. [6] பிளந்துதடவினதோ, புகுந்திங்குலாவினதோ, பிளந்துதடவியதோ.

[இராமபாணங்கள் இராவணனுடைய முத்தாரமணிந்தமார்பை வாயகன்ற குகைபோலத் தோன்றும்படி பிளந்து உலகைக் கடந்து அப்பால் நெடுந்தூரஞ் சென்றன. அந்த அம்புகளால் வீரங் குறைந்து வலிகுறைந்து வரங்குறைந்து முன்னையநிலை முற்றும்

மாறிப் போரிலே தோல்வியுற்று(ப் படைஞரையெல்லாம் இழந்து) தனியாகி வீழ்ந்தான் இராவணன். நான் நிர்ப்பாக்கியவதியானேன். (பல அம்புகளால் உடல்முழுதுந் துளைக்கப்பட்டு) ஓய்ந்திருந்த இராவணனுடைய உயிரைக் குடித்திட்டது, (கடைசியான) ஓர் அம்பு (பிரமாத்திரம்). மனிதன்வலிமை இப்படிப்பட்டதோ! (அதனை இதுவரை அறிந்தேனில்லையே)* தசரதன் கட்டளையினால் இராமன் தவவொழுக்கத்தை மேற்கொண்டு சீதாலக்குமணரோடு காட்டுக்குவந்ததும், இராமன்மேற் காதல்கொண்டு சூர்ப்பனகை மூக்கறுப்புண்டதும், அவள் சீதையின் அழகை வருணித்துக்கூறி இராவணனுக்கு மோகமூட்டியதும், அவன் சீதையைக் கவர்ந்து சிறைவைத்ததும், அவள் கற்பும், இராவணன்வதத்திற்குக் காரணமாய்த் தேவேந்திரன் செய்த தவப்பயனால் முடிந்தனவே.†

---

* ஆரம்போர் திருமார்பை அகன்முழைக ளெனத்திறந்திவ் வுலகுக் கப்பால்
தூரம்போ யினவொருவன் சிலைதுரந்த சரங்களே! போரிற் றோற்று
வீரம்போ யுரங்குறைந்து வரங்குறைந்து வீழ்ந்தானே வேறே! கெட்டேன்!
ஓரம்போய் உயிர்பருகிற் றிராவணனை மானுடவன் ஊற்றம் ஈதோ!

ஆரம்போர் - முத்தாரம் போர்த்த (மறைத்த) - முத்தாரமணிந்த. முழை - குகை. சிலை - வில். துரந்த - எய்த. சரம் - அம்பு. உரம் - வலிமை. வேறு - தனி (தமிழகராதி). கெட்டேன் - அதிட்டங்கெட்டவளானேன். கெட்டேன் - இரக்கக்குறிப்புச்சொல்லுமாம் (தமிழகராதி). பருகிற்று - குடித்தது. ஊற்றம் - வலிமை. 'ஓரம்போ யுயிர்பருகிற்று இராவணனை' என்பதற்குப் 'பட்சபாதம் நீங்கி இராவணனையும் உயிர்பருகியிட்டது' என்று பொருள்கூறுதலுண்டு.

† காந்தையருக் குயிரனைய சானகியார் பேரழகும், அவர்தம் கற்பும்,
ஏந்துபுயத் திராவணனார் காதலும், அச் சூர்ப்பனகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால் வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார் பெருந்தவமாய்ப் போயிற் றம்மா!

காந்தையர் - பெண்பாலர். அணி - ஆபரணம். அனைய - போன்ற. சானகி - சனகன்மகள் - சீதை. ஏந்துதல் - ஓங்குதல். பணி - கட்டளை. கான் - காடு. போந்தது - வந்தது. கடைமுறையே - முடிவிலே. அம்மா - அதிசய இரக்கக்குறிப்புச்சொல் (தமிழகராதி).

தேவருக்கும் திசையானைகளுக்கும் சிவபெருமானுக்கும் பிரமதேவனுக்கும் திருமாலுக்கும் மற்றும் யாவருக்கும்மேலான வலிமையுடையவனுன இராவணனுக்கு முடிவுகாலம் எப்போதுண்டாம்? (ஒருபோது முண்டாகாது) என்றெண்ணி இறுமாந்திருந்தேன். நீ ஆவலோடு வருந்திச்செய்த பெருங்கடல்போலப் பெரியதும் (செய்தற்கு) அரியதுமான தவத்துக்கும் (அந்தத் தவத்தாற்பெற்ற) வரமாகிய சிறந்த பாதுகாப்புக்கும் (அழிவையுண்டாக்கவல்ல) வலிமையுடையனுன ஒருமனிதன் உளனென்று கருதாமற் போனேனே.* உன்னுடைய மூன்றரைக்கோடி ஆயுளுக்கும் அளவிடமுடியாத வலிமைக்கும் அழிவில்லையென்றெண்ணினேன். அளவற்ற வரபலமுடைய உன்பெருவாழ்வாகிய பாற்கடல் சீதை (மயல்) ஆகிய உறைமோரினுல் திரிந்து கெட்டுவிடுமென்று தெரிந்தேனில்லையே!' என்று புலம்பினுள்.

மண்டோதரி மரணம்

இவ்வாறு புலம்பி அழுத மண்டோதரி, இராவணன்மார்பைக் கைகளால்தழுவி ஏங்கிப் பெருமூச்சுவிட்டுப் பிராணனைவிட்டாள். தன் கணவன் இறந்த பெருந்துயரால் உயிர்நீங்கிய மண்டோதரியைத் தேவமாதர் முனிவர்பத்தினிமார் முதலிய எல்லாமகளிரும் கொண்டாடினுர்கள்.

---

* தேவர்க்கும் திசைக்கரிக்கும் சிவனுர்க்கும்
அயனுர்க்கும் செங்கண் மாற்கும்
ஏவர்க்கும் வலியானுக் கென்றுண்டாம்?
இறுதியென ஏமாப் புற்றேன்.
ஆவற்கண் நீ உழந்த அருந்தவத்தின்
பெருங்கடற்கும் வரமென் றூன்ற
காவற்கும் வலியானோர் மானுடவன்
உளனென்னக் கருதி னேனே

கரி - யானை. அயன் - பிரமன். ஏவர் - யாவர். இறுதி - முடிவு. ஏமாத்தல் - செருக்குறுதல். இறுமாத்தல் - பெருமைபாராட்டுதல். ஆவற்கண் - ஆவலோடு. 'கண்' என்ற ஏழாம்வேற்றுமையுருபு 'ஒடு' என்னும் நான்காம்வேற்றுமையுருபுப்பொருள்படவந்தது, உருபுமயக்கம்; 'யாதன் உருபிற் கூறிற்றுயினும்—பொருள்செல்மருங்கின் வேற்றுமை சாரும்.' உழத்தல் - வருந்தல். ஆன்ற - சிறந்த.

இராவண மண்டோதரியர் தகனம்

விபீடணன், அகிற்கட்டைகளையும் சந்தனக்கட்டைகளையும் அடுக்கி அந்த அடுக்கின்மேல் இராவணனுடலைக் கிடத்தி, வெண்கொற்றக்குடை கொடிகளுடனே மாதர் சூழ்ந்துவர, மனவருத்தத்துடன் கொள்ளிவைத்தான். குடங்கொண்டு கொட்டினாற்போலக் கண்ணீர் குமிழியிட்டுக் கொப்புளியாநிற்க, விபீடணன் கணவனோடிறந்த மண்டோதரியையும் இராவணனுடனே அக்கினிதேவனுக்கு *அவியாக்கினான்.

விபீடணன், இறந்த இராக்கதரெல்லாருக்கும் ஈமக்கடனியற்றி இராமனையெய்துதல்

இவன்போல ஈமக்கடனியற்றுவா ரெவருமில்லையென்னும்படி, விபீடணன், இறந்துபோன எல்லா இராக்கதர்க்கும் சாத்திரமுறை தவறாமற் சிறப்பாக ஈமக்கடனியற்றி இராமனையடைந்து வணங்கினான். இராமன், 'உன்மனத்துள்ள கொடுந்துயரம் நீங்குவாயாக. பிறந்தவர் இறந்திடல், முற்காலந்தொட்டு நடக்கும்முறையென்று தெளிவாயாக' என்று கூறி விபீடணனுடைய துக்கத்தை ஆற்றினான்.]

இராவணன்வதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

---

* அவி - அக்கினிதேவனுக்கு இடும் உணவுப்பண்டம்.

ஸ்ரீ:

திருப்புல்லாணிச் செகநாயகர்மீது சிந்து

[குறிப்பு :— 'இலங்குமுத்தும் பவளக்கொழுந்தும் எழிற் றாமரைப் புலங்கள்முற்றும் பொழில்சூழ்ந்தழகாய' தென்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம்பண்ணப்பெற்றதும் சரணுகதிவிளைந்த தமிழ்நிலமாய்விளங்குஞ் சிறப்புடையதுமான திருப்புல்லாணித் தலவிஷயமான எத்தனையோ பிரபந்தங்களும் தனிப் பாடல்களும் இசைப்பாடல்களும் அடங்கிய காகிதக்கையெழுத்துப் பிரதியொன்று, அத்திருப்புல்லாணியைத் தம்பிறப்பகமாகவுடையவரும் இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராசநரும் தமிழ்க்குப் பெருந்தொண்டுபுரிந்துவருபவருமான ஸ்ரீ. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுப் படித்துவரும்போது அதனுள், பல செய்யுள்கள் இதுகாறும் அச்சிடப்படாதனவாயும் சொல்வளம் பொருள்வளம் முதலிய பல நலன்களும் வாய்ந்தனவாயும் காணப்பட்டன. அவற்றுள், திருப்புல்லாணிச் செகநாயகர்மீது சிந்து என்ற தலைப்புடன் அடுத்து வெளியிடப்பெறும் இசைப்பாடலும் ஒன்று. இது, திருப்புல்லாணியிற் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள செகநாயகரைப் பாட்டுடைத்தலைவராகவும், குப்பையர் என்பவருடைய மகளைக் கிளவித்தலைவனுகவும் கொண்டு, தலைவனைப் பிரிந்து விரகமிக்க ஒரு தலைவிகூற்ருக இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. இதனை இயற்றியவர் பெயர் முதலிய விவரமொன்றும் தெரியவில்லை. இதனைச் செந்தமிழ்நேயரும் படித்து இன்புறுமாறு கிடைத்த கையெழுத்துப்பிரதியில் உள்ளவாறு வெளியிடலானேன். இவ்வாறே அத்தலவிஷயமான பிற பாடல்களும் அவ்வப்போது வெளியிடப்பெறும். உதவியாசிரியர்.]

ஸ்ரீ:

திருப்புல்லாணிச் செகநாயகர்மீது சிந்து

சந்தக்குழிப்பு

தந்தானந் தானன தந்தத்
தனத்த னுதன தனத்த னுதன
தந்தானந் தானன தந்தத்
தனத்த னுதன தனத்த னுதன
தனன தனனதந்த தனன தனனதந்த
தனன தனனதந்த தானன தானன

செந்தேன்வண் பூவலர் சந்தப்
பொழிற்கு லாவிய திருப்பு லாணியில்
வந்தோர்நந் தோருமை பங்கற்
கிடுக்க ணேடமு னிரட்சை கூர்பவர்
மருது சகடுதைந்த சரண கமலரெங்கள்
வரத ருலகமுண்ட மால்செக நாயகர் (1)

திந்தோமென் ஞேரா வின்பொற்
படத்தின் மீதினில் நடித்த தாண்முனி
பின்போய்வன் சாபநெ டுங்கற்
புதுப்பெ ணுகமுன் மிதித்த தாளையென்
முடியி னிதமணிந்து கவலை வினைகளைந்த
புனிதர் புல்லையமர்ந்த மால்செக நாயகர் (2)

மந்தாரஞ் சாதிவி சும்பைக்
கிழித்த பூகதம் வருக்கை மாதளை
தெங்காரஞ் சூதநெ ருங்கிச்
சிறப்பு மேவிய திருப்பு லாணியில்
வளரும் வாதர்தொண்டர் அடிமை யெனவிரங்கி
யெனைம கிழ்பவர்செங்கண் மால்செக நாயகர் (3)

திண்பார்விண் டேவரி றைஞ்சித்
துதிக்கு மாதவர் திருப்பு லாணியு
வந்தோர்பொன் சேர்வுறு துங்கப்
புயத்தர் பாரத முடிக்க வேவரு
பகலவ னொளிகுன்றி மறைய மையிருளெங்கு
நிறைய வளை தூரந்த மால்செக நாயகர் (4)

கந்தாவைந் தாருவை மஞ்சைப்
பழிக்க மாநிதி யிறைக்கு நீள்கர
வென்றேபண் பாமுழு வஞ்சர்க்
குரைத்து நான்மன மலைத்து வீணினில்
அலைவ தையொழியென்று தொழுமு னருள்புரிந்த
விமலர் புல்லையில்வந்த மால்செக நாயகர் (5)

கண்பால்வெந் தீயெழ வெண்பற்
கடித்து நீடும யிடத்தின் மேலயில்
கொண்டேவந் தாவிவ ருந்தப்
படுத்தி யேநர கினுக்கு ளேயமன்
விடுவ னெனவெனெஞ்சு பதறு தெனவிளம்பு
முனருள் புல்லையில்வந்த மால்செக நாயகர் (6)

செம்பூமின் சீதைவ ருந்தச்
சிறைக்கு ளேமுன மிருந்து பாதக
லங்கேசன் போர்மிசை துஞ்சத்
தருப்பை மேல்வளர் திருப்பு லாணியில்
வருண னையுணினைந்து துயில்கொள் பவர்முகுந்தர்
ததியும் வெண்ணெயுமுண்ட மால்செக நாயகர் (7)

என்போலிங் காருளர் சந்தத்
தமிழ்ச்சொன் மாலைகள் படித்த சோதைதன்
மைந்தாபஞ் சாயுத வென்றுச்
சரிக்க வேயனை வயிற்றி னீயினி
வருகு வதிலையென்று கருணை செய்தவரண்டர்
பரவு புல்லையில்வந்த மால்செக நாயகர் (8)

வண்டோகண் டோவிழி மென்சொற்
றிருப்பெ ணேமதி முகப்பெ ணேயினி
யுன்கோபந் தீருவ தென்றைக்
கெனக்குன் மேன்மயல் பெருக்கு தேயென
மடவி யரையணைந்த மயல கலவுகந்த
முதல்வர் புல்லையில்வந்த மால்செக நாயகர் (9)

சந்தேகந் தானென மஞ்சத்
திருத்தி நீயென்னை யணைத்தி டாய்மின
ணங்கேயுன் பார்வையெ னெஞ்சைத்
துளைக்கு தேயுட விளைக்கு தேயென
மகளிர் பிறகுசென்று திரியு மயல்களைந்த
பரமர் புல்லையில்வந்த மால்செக நாயகர் (10)

வண்டேவந் தாரிலை யெந்தச்
சிறுக்கி வேல்விழி மருட்டி லேமயல்
கொண்டோசென் றீரினி யின்றைக்
கழைத்து வாமத னெதிர்க்க வாடினன்
மருவி மனமகிழ்ந்து கலவி செய்துபிரிந்த
கணவர் புல்லையில்வந்த மால்செக நாயகர் (11)

முன்போலென் பான்மன தொன்றித்
தொடைக்கு ளேயென்னை யிருத்தி நீசுருள்
தந்தேபண் பாடியி ணங்கிச்
சுகிக்க வாடிம துரப்பெ ணேமன
தெனடி தெரியவின்று நுவல்புல் லையிலுறைந்த
நமது பெயர்நெயுண்ட மால்செக நாயகர் (12)

சந்தாரும் பூண்முலை நெஞ்சிற்
பொருத்தி வாயிதழ் கடித்தென் னூறலை
யுண்டேகொண் டாடிநி தம்பத்
தடத்தி லேயடி துரைப்பெ ணேயென
துவிர லளையவின்று மருவு புல்லையில்வந்த
நமது பெயர்நெய்யுண்ட மால்செக நாயகர் (13)

எங்கேசென் றூரடி யிந்தப்
படிக்கு ளேபா தவித்து வாடவி
கழ்ந்தேசெந் தேனமு துங்கைத்
திடக்க லாமதி முகப்பெ ணேயுனை
யகலு வதில்லையென்று தலையின் மிசையறைந்த
கணவர் புல்லையில்வந்த மால்செக நாயகர் (14)

முன்பாவந் தீரவி ரங்கிக்
கடைக்க ணால்வெகு வரப்ர சாதமு
வந்தேதந் தோர்வர மங்கைப்
பதிக்கு ளார்மனை யழைத்து மாதவர்
மணமி குமரவிந்த மலர்ம களையணைந்த
விமலர் புல்லையில்வந்த மால்செக நாயகர் (15)

வந்தாயன் பாயிதழ் கொஞ்சிக்
கடித்து நாடொறு மணைத்தி டாதமு
றண்டேன்மஞ் சேய்மகி பன்குப்
பையற்கு மாமக னெனக்கு மோகமுன்
மிகவு முதவுநண்பன் விமலன் வளமைமிஞ்சி
நிகரில் புல்லையில்வந்த மால்செக நாயகர்
கமல மலரணிந்த திருமார்பினர் (16)

1942-ஞு ஏப்ரல்மீ 12உ (விஷு-ஞு பங்குனிமீ 30உ) மாலை 2½மணிக்கு, இராமநாதபுரத்தில் மஹாராஜா அவர்கள் அரண்மனையிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள் —அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C. —உப-அக்கிராசனாதிபதி.
3. ,, மஹாவித்துவான் R. இராகவையங்காரவர்கள்.
4. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.
5. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I 1942-ஆம் ஞு மார்ச்சு மீ முடிய உள்ள சங்கமாபீசு வரவு செலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்குக்கொடுத்துள்ள Fixed Deposit தொகை ரூ 1050, மற்றொரு Fixed Deposit தொகை ரூ 1001 ஆக இவ்விரண்டையும், ஒவ்வொன்றும் இரண்டுவருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு 3½ வட்டிக்குப் புதுப்பித்திருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

III மதுரை பேச்சியம்மன்துறை ரஸ்தாவிலுள்ள சங்கத்தைச்சேர்ந்த காலியிடத்தை மதுரையிலிருக்கும் N. K. R. பெரியணநாடார் & கம்பெனிக்கு மாதம் 40 ரூபாய் வாடகைக்கு மூன்றுவருஷங்களுக்குக் குத்தகைக்கு விட்டிருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

IV சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று மதுரை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ. R. சேஷையங்கார், B.A., B.L. அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

V 1942–1943-ஆம் வருஷத்துக்குத் தயாரிக்கப்பெற்ற சங்கமாபீசு வரவுசெலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

VI 1942-ஆம் ௵ நடத்தப்பெற்ற சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாக எழுதிய ரிப்போர்ட்டு ரிக்கார்டு செய்யலாயிற்று.

VII சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்களின் மெமோவும், சங்க வருஷோத்ஸவத்தில் வாசிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்ற அறிக்கைப்பத்திரமும் படிக்கப்பெற்றன. காலதேசவர்த்தமானநிலைமைகளை யுத்தேசித்து சங்கவருஷோத்ஸவக்கூட்டம் இப்பொழுது நடத்தவேண்டிய அவசியமில்லையென்றும் அறிக்கைப்பத்திரத்தை ரிக்கார்டில் வைக்கும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று.

VIII மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய இராமநாதபுரம் மகா-ா-ா-ஸ்ரீ. P. ராமஸாமித்தேவர் (Honorary Magistrate & Leader of the Public for Ramnad Taluq) அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

IX சங்கம் லைபரேரியன் A. நாராயணையர் இரண்டுமாதகாலம் லீவு பெற்றிருந்ததற்குப் பிடிக்கப்பெற்ற சம்பளத்தை ஷியாருக்குக் கொடுக்கும்படி சாங்கிஷன் செய்யலாயிற்று.

X சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்களின் மெமோ படிக்கப் பெற்றது. ஸ்ரீ. திரு. நாராயணையங்காரவர்களுக்கு 1940-ஆம் வருஷத்திற் பாக்கிமாதங்களுக்குச் சம்பளமாக ரூ 200 கொடுப்பதுடன், 1941-ஆம் ௵ முதல் ஒவ்வொரு வருஷமும் ரூ 350 Honorarium (கௌரவச்

சம்பளம்) கொடுத்துவரவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று. அவர்கள் சங்கக்கலாசாலையின் கௌரவ தலைமையாசிரியராக இருப்பதுடன் செந்தமிழ்ப்பத்திரிகைக்குப் பத்திராசிரியராகத் தொடர்ந்து இருந்துவரவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

XI சங்கத்தின் கௌரவகாரியதரிசியவர்களின் மெமோ படிக்கப்பெற்றது. சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாதசேதுபதியவர்கள் அண்ணாமலை சர்வகலாசாலை செனேட்டில் சங்கத்தின் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பெறுகிறார்கள். அவர்களை அண்ணாமலை சர்வகலாசாலை செனேட்டுக்குச் சங்கத்தின் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கலாயிற்று. அக்கிராசனாதிபதியவர்களைத்தவிர மற்ற எல்லா அங்கத்தினர்களாலும் Vote செய்யப்பெற்றுத் தீர்மானம் அங்கீகரிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*

12—4—'42. அக்கிராசனாதிபதி.

ஆராய்ச்சியின் ஆராய்ச்சிபற்றிய குறிப்பு.

"வாசகம் வல்லார் முன்னர் யாவர்வாய் திறக்க வல்லார்?"

ஆயினும், திரு. பேராசிரியர் பாரதியாரவர்கள் பேருரைக்கெதிராக, இச் சிறுகுறிப்பை எழுதத் துணிந்திட்டேன். பொறுத்தருள்வார்களாக.

'ஆராய்ச்சியின் ஆராய்ச்சி'யில், திரு. S. S. பாரதியவர்கள் 'வங்கெதிரேதொழுதான்' என்ற பாட்டுக்குத் தங்கள் உரையே சரியானதென்பதற்கு முன்கூறாத புதுநியாயமொன்றும் கூறவில்லை.

செந்தமிழ் தொகுதி 39, பக்கம் 212, வரி 21, 22-ல் 'தழுவுதல் உயர்வுணர்வு,....................சுட்டிவரும்.............மெய்ப்பாடாம்' என்கிறார்கள். மைந்தன் தந்தையைத் தழுவுதலில் உயர்வுணர்வில்லையென்பது தெளிவு. கம்பராமாயணசாரம் குகப்படலம் 181-பக்கத்தில் 'வங்கெதிரே தொழுதான்' என்ற பாட்டின் பின்னிரண்டடிப்பொருள், 'பெரியோர் சிந்தையுள்ளும் சென்னிமீதும் வீற்றிருக்கும்படி மேம்பட்ட பெரும்புகழ்படைத்தவனாகிய குகன் தன் தந்தையைத் தழுவுதலில் தனக்குண்டாம் களிப்பினும் அதிகமான களிப்புண்டாகப் பரதனைத் தழுவினான்' என்று கூறப்பட்டிருக்கிறதைக் காண்க.

215-ஆம் பக்கத்தில் கடைசி மூன்றுவரிகளில், குகன் இராமனுக்குச் செய்த அன்பு, பலாபேட்சையில்லாததன்று, மோட்சபலாபேட்சையோடுகூடியதென்ற பொருள்படக் கூறியிருப்பது அறமன்று, அவன் அன்பு, 'கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'களுடைய அன்பாகக் கொள்ளுதற்குரியதாதலால்.

'ஆராய்ச்சியின் ஆராய்ச்சி'யில், மற்றைய கூற்றுகள், பாட்டின் பொருளை நிச்சயித்தலை விசேடமாகப் பாதிக்காதவைகளென்று நான் கருதுதலால், அவைகளைப்பற்றி நான் ஒன்றுங் கூறவில்லை. 'ஆராய்ச்சியின் ஆராய்ச்சி' முடிவில் 'எம்மிருவர் கருத்தினையும் ஏதுவுடன் இயன்றவரை எழுதிவிட்டோமாதலினால் (அறிஞர்) ஆழ்ந்தாய்ந்து சீர்தூக்கிக் கம்பர்கவிக் கமைந்த பொருள் கொள்வரென நம்பி இதை முடிக்கின்றேன்' என்று கூறப்பட்டிருப்பதை இங்கே கூறி இந்தக்குறிப்பை முடிக்கின்றேன்.

வேள்ளகால்,
23—4—1942.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

செகநாதர்பேரில் விண்ணப்பம்

காப்பு

கட்டளைக்கலித்துறை

பூமா துகந்துறை புல்லாணி மாவினைப் போற்றிச் செஞ்சொற்
பாமாலை செந்தமிழ் விண்ணப்ப மாகப் பகர்வதற்கு
நாமாது சேனையர் கோன்குரு கூரரெங் நாளும்வளர்
காமா தவரருள் சக்கரஞ் சங்கமுங் காப்பதுவே.

நூல்

கலிவெண்பா

1 பொன்பூத்த செங்கமலப் பூமே விருந்தமின்னைத்
தென்பூத்த மார்பில்வைத்த தேவனே—முன்பூத்த

2 உந்திக் கமலத் தொருபிரம னைப்படைத்தே
யிந்தவுல கங்காத்த வென்கோவே—விந்தைபெறும்

3 சற்பசய னத்தைவிட்டுத் தானுதி சேதுவினிற்
றெற்பசய னத்திலுறை தேவனே—உற்பனமாய்ச்

4 சொல்லாணி யாகத் துதித்தபதின் மர்க்கிரங்கும்
புல்லா ணியிலிருக்கும் புத்தேளே—செல்லார்

5 பொருதிரையிற் கண்ணரசன் போற்றி வணங்கத்
திருவரசிற் கண்வளர்ந்த தேவே—பெருமரசு

6 செய்ய விலங்கைத் திருநகர்க்கு வீடணனை
வையம் புகழவைத்த மாதவா—ஐவர்தமைக்

7 காத்துக் கவுரவரைக் காண்டீபத் தாற்செயிக்கப்
பார்த்தனுக்குத் தேரூர்ந்த பாகனே—வாய்த்தபுவி

8 தன்னை மணந்துமொரு தாளா ளளந்திரந்து
பின்னையுண்டு பேர்த்தெடுத்த பெம்மானே—முன்னயன்மால்

9 சொல்லு மறைதிருடுந் துட்டமது கைடவரைக்
கொல்லமச்ச மாகிவருங் கோவிந்தா—தொல்கடலிற்

10 சீர்மேவு மந்தரத்தாற் றேவர்க் கமுதளிக்கக்
கூர்மமெனத் தாங்கிநின்ற கோபாலா—பாரிற்

11 சராகமுடன் பொற்கண்ணன் றன்னைவதை செய்ய
வராகமென வந்தநெடு மாலே—துராகதமாம்

12 பின்னோ னுரத்தைப் பிளக்கநர சிங்கமென
அந்நாளிற் றூணில்வந்த அச்சுதா—முன்னுளில்

13 ஆமெனவே மாவலிபா லம்புவியைத் தானிரக்க
வாமனரூ பம்படைத்த மாயோனே—பூமேற்

14 செமதக் கினிபகவான் சேயெனவே தோன்றி
ரமணீகஞ் சேர்பரசு ராமா—சுமைபெறவே

15 தேடு மயோத்தித் தெசரதன்பால் வந்துதித்து
நாடுபுகழ் கொண்ட ரகுராமா—பீடுபெறும்

16 தாயான ரோகணியாள் தன்வயிற்றி லேயுதித்த
சேயா பலபத் திரராமா—மாயைதனை

17 நீட்டியே பூபாரம் நீக்க அவதரித்த
தாட்டிகஞ்சேர் கிருஷ்ணவ தாரனே—மேட்டிமையாய்ச்

18 சற்கருமத் தைக்கெடுக்குஞ் சத்துருக்க ளைச்செயிக்கக்
கற்கி வடிவெடுக்குங் காரணா—சொற்கமெனும்

19 பூலோக வைகுண்டம் புல்லாணி யாமெனவே
மேலோர் வணங்கவந்த மெய்ப்பொருளே—சேலாக

20 அன்னமென வேதத் தரும்பொருளை நான்முகற்கு
முன்னமுரை செய்த முகில்வண்ணா—தன்னடியார்

21 அல்லல் வினையை யகற்ற மகத்துவஞ்சேர்
புல்லை வனத்தில்வந்த புண்ணியனே—தொல்லுலகில்

22 ஆதிபதி யாகியபுல் லாணித் தலத்தாதி
சேதுபதி யான செகநாதா—வோதியவுன்

23 ஏவற் படிநடந்தங் கேடேற இந்த்ராதி
தேவர் பணியுஞ் செகநாதா—பூவிருந்த

24 முந்தை யயன்படைத்த மூவுலகை யுங்காத்துச்
சிந்தை களிக்குஞ் செகநாதா—சந்ததமுன்

25 சேவடிக்கு நாயடியேன் செப்பியவிண் ணப்பமொன்றிங்
கோவ விலாதே யுரைக்கக்கேள்—பூவுலகிற்

26 செய்தவினைக் கிடாகச் சேதனா சேதனமா
யெய்தி யெடுத்தவுட லெத்தனையோ—மெய்திகழும்

27 அந்த வுயிர்த்தொகுதி யாங்கதனில் யான்செய்வினைப்
பந்தப்படி யோவருளின் பண்போதான்—எந்தத்

28 தவமோ சொலுங்காக தாலீயம் போலுற்
பவமாய் நரசென்மப் பண்பாய்—நவமாகும்

29 மானிலத்திற் சத்திரிய வங்கிஷத்தி லேபிறந்து
நானிவனென் றெண்ணுமுடல் நாட்டமா—யீனதையாந்

30 துக்க சுகங்கள் தொடர்ந்த விருவினையின்
பக்கமதில் நின்றும் பரகதிக்காய்—முக்ய

31 இதவுப தேசத் தியல்பாக விஷ்ணு
மதவிசிட்ட வத்துவித மார்க்கம்—அதுவறிந்த

32 ஆசூரி அப்பளா சாரியா னுக்ரகத்தின்
பூசா விதியைப் புரிந்ததால்—சூசகமாம்

33 மிக்கதொரு சற்குருவுன் விட்சணக டாட்சத்தால்
நற்கலைதேர் வேதாந்த ஞானமாந்—தக்க

34 சுயம்பிர காசன் சொலுமுறுதிக் குள்ளாய்
நயம்பெறநின் றேனிகத்தில் நானும்—பயஞ்செய்கலி

35 தன்னால் மெலிந்து தமியேனுன் சந்நிதியின்
முன்னாக வந்து முறையோவென்—றின்னாளில்

36 அச்சுதா னந்தா அரிகேச வாமுகுந்தா
பச்சைநிற வண்ணா பரந்தாமா—முச்சகமும்

37 போற்றியவை குந்தா புராண புருஷவென்றே
தோத்திரங்கள் மெத்தத் துதித்துநின்றும்—பார்த்திரங்கி

38 அஞ்சலென்று செல்வம் அருளா யுனக்கிதென்ன
பஞ்சமோ நீநினைத்தாம் பாரமோ—விஞ்சும்

39 கருணை ரசமுனது கண்ணிலென்க ணில்லாய்
பொருள்நா னறியப் புகலாய்—தருணம்

40 அறிந்துதவு வாயென் றடைக்கலமாய் வந்தாற்
செறிந்து பராமுகநீ செய்தாற்—பிறிந்துமுனை

41 யன்றியொரு தெய்வம் அகிலத்தில் வேறுமுண்டோ
சென்றுவிழுந் தென்குறைகள் செப்புதற்கு—நன்றிபெறச்

42 செப்பிய வார்த்தை திருச்செவியிற் கேளாம
லிப்படிநீர் சும்மா விருப்பதென்னோ—மைப்படிந்த

43 பூதனைபால் நஞ்சைப் பொசித்தமயக் கந்தானோ
வேதமல்லர் போர்செய் திளைத்ததோ—வேதனைசெய்

44 காளிங்கன் மேல்நடனங் காட்டியதாற் கஞ்சமலர்த்
தாளிங்கு நோதலின்னந் தானுமுண்டோ—சூழுமந்த

45 ஆய்ப்பாடி தன்னில் அசோதையுர லிற்றும்பால்
வாய்ப்பாய்ப் பிணித்த வருத்தமோ—மேய்ப்பாளாய்க்

46 காலியின்பின் னேதிரிந்து கானி லலைந்ததுவோ
சோலியிடை மாதர்தமைத் தோய்ந்ததுவோ—மேலிதமாம்

47 ராதையின்மே லாசையுமிந் நாளில் நினைப்பதுண்டோ
பேதையிவன் பாலென்ன பேச்சென்றோ—ஓதுமப்போ

48 வாய்முத்துதிருமோ மாமகத்து வந்தவிர்ந்து
போய்விடுமோ என்ன புதுமையோ—நேயமுடன்

49 எண்ணரிதாம் புண்ணியங்க ளெல்லாஞ்செய் தாரெனினும்
நண்ணரிதா முன்னையன்றி நற்பலன்கள்—திண்ணமதாய்

50 உங்கள்திரு நாமத்தை யுச்சரித்தாற் செங்கதிர்முன்
பொங்கு மிருடவிர்ந்து போவதுபோல்—இங்கு

51 கலிப்பணிக ளேர்ந்தே கனசம்பத் துண்டாய்ச்
சலிப்பிலா தில்வாழ்க்கை சாரும்—பலித்துமுன்பு

52 நாரதா திப்ரபல ரானதுவு முன்னும
சாரவமு தந்துதித்ன் தாலன்றோ—பாரிடத்தில்

53 வான்மீக ரானவர்தா மாமகங்க ளென்னசெய்தார்
தான்மேற் குசலனென்ன தந்தனன்காண்—கான்மேல்

54 மதங்கப்பெண் ணுளே மருவுமசா மேளன்
நிதங்கொள் தவங்களென்ன செய்தான்—இதங்களறி

55 யாதகட்டு வாங்க னவன்செய் தருமமென்ன
ஓதுகுச்சை யென்ன வுதவினுள்—ஆதியாம்

56 மூலமெனக் கூவி முறையிட் டழைத்தகரி
மேலு முணர்ந்த விதமென்னே—சாலத்

57 தணிவிலா நின்கருணை தானேயுண் டாகி
லணுவு மகமேரு வாமே—பணிவிழுங்கும்

58 கோபாலர் தங்கள் குழக்கன்றின் பின்ருெடர்ந்த
ஆபால ருய்ய வருளலேயோ—தாபால

59 னென்றுரைத்த சாந்தீ பினிக்கா யெமனிடத்திற்
சென்று மகவைத் திருப்பலேயோ—அன்றுதான்

60 வாயார வுன்னுமம் வாழ்த்துந் துரோபதைக்கங்
கோயாத் துகிலே யுதவலேயோ—வீயாது

61 சொல்லுமுனி சாபத்தாற் ருேன்று மகலிகையாங்
கல்லையொரு பெண்ணுக்கக் காண்கலேயோ—வல்லமையாய்ப்

62 பாரிசா தத்தருவைப் பாவைசத்ய பாமைக்காய்ப்
பாரிற் கொணர்ந்து பதிக்கலேயோ—நேரே

63 துலேவிலா ஆனினத்தின் றுன்பங்கள் தீர
மலேயினுற் கல்வருட மாற்ற—விலேயோசொல்

64 இப்படியே யுன்மகிமை யெங்கு நடத்துவித்தாய்
அப்படியே என்னிடத்தி லாகாதோ—ஒப்புரவில்

65 ஆனு முழுமூட ராஞலுங் காப்பதுவுந்
தானே விருதுனக்குத் தானன்ருே—ஏனே

66 செகத்தைப் புரக்குஞ் செகநாத னென்றே
யிகத்திலொரு பேர்பெற் றிருந்தும்—மகத்துவந்தான்

67 என்னளவு மில்லா திருந்ததென என்வினேயோ
உன்னருளின் மிக்கோயென் னூழ்வினேதான்—இந்நிலத்திற்

68 பேசுஞ் சரமசர பேதங்க ளாஞ்சீவ
ராசியிலே நானொருவ னல்லவோ—ஆசில்

69 அணுவுக் கணுவாய்நீ யங்கங்கு நின்று
புணர்வதுந்தா னென்னவிது பொய்யோ—உணரிலுங்கள்

70 ஆதிக்கங் கொஞ்சமோ அஷ்டலட்சு மிப்ரசன்னம்
ஓதி முடியுமோ ஓகோகோ—நீதிக்குள்

71 சற்றே கடைக்கணருள் தந்தாற் குறைவாமோ
மெத்தவுநான் கெஞ்சுவது மேன்மையோ—வைத்ததொரு

72 கற்பிள்ளை யைக்கிச்சுக் காட்டுவபோ லென்சொலிது
சொற்பமென வுன்காதிற் றோன்றுதோ—விற்பனன்போல்

73 தேவகிதன் பாலிற் செனித்துப் பொதுவர்மனை
மேவிமக வாய்மாடு மேய்த்துமே—கோவலர்கள்

74 தங்கள்குடிப் பெண்கள் தமைக்கற் பழித்ததல்லால்
அங்கவர்கள் செய்பா லளைதிருடிச்—சங்கையிலா

75 திப்புவியில் மானிடருக் கெண்ணாத கோட்டிசெய்தீர்
செப்பிற் பிறர்க்குஞ் சிரிப்பாமே—தப்பும்

76 இடைப்புத்தி போகாத தின்னமென்ன ஐயோ
மடைப்புத்தி யோயான்சொல் வார்த்தை—துடைக்குற்றே

77 தேகத் துடனே செனித்தோர்க ளெல்லாம்வி
வேகத் துடனடக்க வேதகுமோ—வாகுற்றே

78 புத்திமா னாகும் புரவலனைச் சேவித்தோர்க்
கித்தலத்தி லேயிடுக்க மில்லையே—அத்தகவே

79 போலுமக்கு நானடிமை பூண்டிருந்துந் தாவந்தத்
தாலுந் தவிப்பதென்ன தான்முறையோ—மேலும்

80 விசுவத்துக் கீச்சுரன்றான் வேறுண்டோ நீதான்
அசுவத்த நாரா யணனே—யிசைபெற்ற

81 சொல்லா லுனக்கெனக்குந் தோரா வழக்கதனால்
அல்லாமல் நானடிமை யல்லவோ—இல்லாது

82 புல்லாணி யென்றுதள்ளிப் போட்டா லெனக்குனது
புல்லாணி யன்றிப் புகலுண்டோ—கல்லாணி

83 நெஞ்சகருக் கன்றோவென் னேரெல்லாஞ் சொன்னாலும்
வஞ்சகம்போ லெண்ணுவது மாநிலத்தில்—மிஞ்சகத்தால்

84 உன்னுடைய மாயையிருட் குட்படுத்தி யப்புறத்தி
லென்னைவிட்டுத் தப்பவும்நீ யெண்ணினால்—நின்னருளாஞ்

85 சோதி விளக்கிற் சுயம்பிரகா சப்ரபையாற்
சோதித் துனது சொரூபமதைப்—பேதமுறும்

86 பத்திவயி ராக்கியமாம் பாரக் கயிற்றாலே
பத்திப் பிணித்துப் பதறாமல்—வித்தகஞ்சேர்

87 உள்ளக் குகைக்குளன்பி னுள்ளே யடைத்துவைத்து
வள்ளலே யுன்னை வகைகேட்பேன்—கள்ளநீ

88 செய்தவகை யத்தனையுஞ் செப்பிவெளி யாக்கிடுவேன்
வைதுமொரு வேளையினில் வாழ்த்துவேன்—எய்துபிள்ளை

89 தோணுந்தோ ணுமலென்ன சொன்னாலுந் தந்தைகுற்றங்
காணுமோ நெஞ்சங் களிப்பதல்லால்—வீணேநான்

90 எக்குற்றஞ் செய்தாலும் ஏழையறி யாமையினால்
அக்குற்ற மெய்க்குற்ற மாகுமோ—கைக்குற்றங்

91 கண்ணிமைக்குட் பட்டாலக் கையைத் தறிப்பதுண்டோ
யெண்ணில் பிழைசெய்வதே யென்னியற்கை—தண்ணமரும்

92 பூமிமண வாளன் பொறுப்பதன்றி யார்பொறுப்பார்
நேமி தரித்த நெடியோனே—ஆமிதெனச்

93 சுத்தப் பரம துரியாதீ தப்பிரம
வத்துவே யுன்மகிமை வாழ்த்துங்கால்—நித்யபரி

94 பூரணமா யொன்றாய்ப் புராதனமாய் நிட்களமாய்க்
காரணகார் யங்கடந்த காட்சியாய்—ஆரணங்கள்

95 சொல்லவரி தாயதே சோமயச் சோதிமாய்
அல்லும் பகலுமற்ற வற்புதமாய்—வல்லதொரு

96 அத்துவித மாகி யகண்ட பரவெளியாய்
மெய்த்துவித மாகி விளங்குவதாய்ச்—சத்துச்சித்

97 தானந்த மாகி யகிலாண்ட கோடிகட்குந்
தானந்த மான தனிமுதலாய்—மோனந்த

98 நித்தியவி பூதியொரு லீலாவி பூதிகொண்டு
சுத்தநிற மேகவண்ணந் தோற்றவே—வைத்தபல

99 கோடிசூர் யோதயம்போற் கொள்ளுநவ ரத்னமிட்டுத்
தேடுங்கி ரீடஞ் சிரத்தணிந்து—வாடுமுயிர்

100 ஆன பயிருக் கருள்சேர் மழைபொழிநீ
தானக் கருணைத் தடங்கண்ணுந்—தீனர்சொலும்

101 வாசகங்கள் கேட்கு மலர்ச்செவியுங் குண்டலமுந்
தேசங் குலவிவளர் செவ்வாயும்—மாசில்

102 கதிர்மதியம் போலமலர்க் கையின்மேல் வைத்த
சதிர்பெறுநீள் சக்கரமுஞ் சங்குந்—துதிசேர்

103 அபய வரதமோ டம்புயங்கள் நான்கும்
சுபகரஞ்செய் முன்னூல் துலங்கத்—தபனனொளி

104 மேவுங் கவுத்துவமு மீறு மதாணியொடு
தாவுந் துழாய்மாலை தானிலங்கச்—சேவைதரும்

105 பீதாம் பரமும் பிரமாதி தேவர்தொழும்
பாதாம் புயவடிவும் பாங்காக—வேதாந்த

106 மாகிச் சகளவுரு வாகியிந்த வம்புவியின்
வாகு பெறுங்கருட வாகனத்தில்—ஓகையுடன்

107 பூமே விருந்தவளும் பூமா திருபுறமும்
தாமேவி வாழுஞ் சகுணமாய்க்—காமேவும்

108 புல்லாணி மாநகரிற் போந்து புவியிலுள்ளோ
ரெல்லோரும் போற்ற வெழுந்தருளி—நல்லோருங்

109 கண்ணுவ ரகத்தியர்மார்க் கண்டேயர் காலவர்சொல்
வண்மைப் பிருகுபுல்லை மாமுனியுந்—திண்மையுடன்

110 எம்பெருமா னென்றே யிறைஞ்சியதாற் புல்லாணி
யெம்பெருமா னாகிவரு மீங்தோனே—தம்பமென

111 நேசித் துருகி நினைந்துகந்துஞ் சத்தகன்னி
பூசிக்க வந்துதவும் புங்கவனே—தேசிலங்கும்

112 வையைநதி கண்வநதி வாய்த்தபா லாறுலகம்
உய்யவரும் புல்லாணி யூர்க்கரசே—மெய்யாங்

113 தருமமெனுந் தீர்த்தந் தருமமுத தீர்த்தம்
கருமந் துலைரா கவதீர்த்தம்—வருணனங்கு

114 வந்தமகா தீர்த்தம் வரப்பிரசா தத்தினின்மி
குந்தபொன்னன் கேணிதமிழ்க் கும்பமுனி—நிந்தைதவிர்

115 மாதவத்தாற் செய்த மகாதீர்த்தஞ் சங்கமுகஞ்
சேதுவெனுந் தீர்த்தவி சேடத்தின்—மீதுயர்ந்தும்

116 உக்கிரமா பாதகங்க ளோடிப் பறந்துவிடச்
சக்கரதீர்த் தம்படைத்த தாணுவே—மிக்காஞ்

117 சுவஸ்திக விமான சுகாசனத்தி லேச
கவஸ்து நிறைந்தும்வளஞ் சார்ந்து—சவிஸ்தரமாம்

118 அன்பா லவனியின்க ணஞ்செம்பி நாட்டிலதன்
முன்பாதி யாஞ்சேது மூலத்திற்—றென்பாண்டி

119 தேசத்தி னுலாந் திருப்பதியாம் புல்லாணி
வாசத் திருமா மணிமார்பா—நேசத்தோர்

120 போற்றுசெக நாதாவென் புன்கவலை யத்தனையு
மாற்றுசெக நாதா மனுநாதா—தோற்றியதாம்

121 பைவச்ச பாம்பணைமேற் பள்ளி யமர்வோனே
தெய்வச் சிலையாய் செகநாதா—ஐவர்க்குத்

122 தூதுசென்ற பாதா துலங்கு செகநாதா
சேதுகந்த தெய்வச் சிலையானே—நீதி

123 மகநாத னுதியோர் வாழ்த்தியபுல் லாணிச்
செகநாதா தெய்வச் சிலையாய்—நகராச

124 கன்னி சகோதரனே காயாம்பூ மேனியனே
பொன்னிலங்கும் பூணாரம் பூண்டோனே—வுன்னையே

125 மாதாபி தாகுருவு மற்றுமுள்ள தெய்வமுமெந்
தாதாநீ யென்றே சரணடைந்தேன்—ஆதாரம்

126 ஆகி யெனக்குன் னருட்கண் கிருபைவைத்துத்
தாக மறிந்துதவி தானாகிச்—சேகரமாம்

127 மீதா மிகபாரத்தின் மேன்மைதந்து வாழிசெக
நாதா வெனத்துதிக்க நன்மைசெய்துன்—பாதார

128 விந்தமதிற் சிந்தை விளங்குமதி பத்திதந்து
சந்ததமுங் காத்தருணீ தான்

[பிற்குறிப்பு:—திருப்புல்லாணிச் செகநாதர்பேரில் விண்ணப்பம்: என்னும் இது, இச்செந்தமிழ்ப்பகுதியில் உசக-ஆம் பக்கத்துக் குறித்த காகிதக்கையெழுத்துப் பிரதியிலுள்ளவாறு வெளியிடப் பெறுகிறது. இதனுள், இத்தலத்தின்பெருமையும் இங்குள்ள தீர்த்தவிசேடங்களும் இத்தலத்து இறைவனைவணங்கி அருள் பெற்றோர் பெயர் முதலிய விவரங்களும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர்பெயர் முதலியன தெரியவில்லை. செகநாதரருட்பேறுகருதி இயற்றப்பெற்ற இக்கலிவெண்பாவின் 29-வது கண்ணியால் இதனை இயற்றியவர் க்ஷத்திரியரென்பதும், 31,32-வது கண்ணிகளால் விசிட்டாத்வைத சித்தாந்தியான ஆசூரி அப்பளாசாரியர் என்பவரிடம் உபதேசம்பெற்றவரென்பதும், 34-வது கண்ணியால் சுயம்பிரகாசர் என்பவர்கூறிய உறுதிகேட்டொழுகியவரென்பதும் அறியலாகும். செந்தமிழுதவியாசிரியர்]

ஸ்ரீ:

இராமசெயம்*

[இராமாயணத்திருப்புகழ்]

உத்தரகாதை

(௩௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சாதியு ரைப்பவர்கண் மேன்மையு ரைப்பவர்கள்
பேரையு ரைப்பவர்க ளூரையு யிர்க்குமவர்
தாயைய கற்றுபவர் நேயந டப்பினர்கள் புதுவாழ்வு
சாலவு முற்றவர்கள் வீறுத னைப்பாவி
நாடுத மிழ்க்கவியை வீணிலு குத்துமிகு
சார்வும றப்பெறுதி தானும றத்திரியும் வினையேனைக்

காதல றுத்துமிகு ஞானம ளித்துனது
பாதயு கத்தில்வரு சேவைபெ றுத்தியெழு
காடுத னக்குநிக ரானபி றப்பையினி மருவாதே
காசினி யிற்புதுமை யாகவ ழைத்துமுகில்
போலநி றத்ததிரு மேனியெ ழிற்ப்ரபைகள்
காணவெ ளிப்படுவை யாகிலெ னக்குநிகர் உளரோதான்

வேதவ திப்பெயரி னூளைய ரக்கர்பதி
மோகம யக்கமுடன் வாய்மைகொ ளக்கருதி
வீணுரை செப்பவவ டாதைகு சத்துவச னடைநாளின்
மேதகு விட்ணுவர னுகவ ரித்தனன்விண்
ணேறினன் மற்றெனது தாயும னற்குள்விழ
மேவுத வத்துறையி னுனுமு யற்சிகொடு நிலையானேன்

---

* இது, இச்சங்கப் புத்தகசாலையிலுள்ள ஒரே ஏட்டுப்பிரதியிலுள்ளவாறு வெளியிடப்பெறுகிறது. ஏட்டில் இடையிடையே சிதைந்தபகுதி புள்ளியிடப் பெற்றுளது.

நீதிய லக்கடுக வேகென மற்றவளை
மேனிதொ டக்கருது வானெவெ குட்சியொடு
நீகெடு கைக்குவரு வேனென வக்கினியுள் அவள்போனள்
நீண்மிதி லைக்குளவள் காணுனை யுற்றவனும்
ஈதுகதைக்குவரு லாறென முற்புகனும்
நேயவ கத்தியனை நாளுமகிழ்ச்சியுறு பெருமாளே. (26)

மோது குழைதாண்டி மீளுவ
நீடு குழைசேர்ந்து லாவுவ
மோக கலைதேர்ந்து கூறுவ எவர்மீதும்
மூரி மதவேந்தை யேவுவ
ஆல மெனமூண்டு சீறுவ
மூத றிவெலாங்கை யாடுவ வசியாய
பாத கமதூர்ந்த வேல்விழி
மாதர் கள்பிராந்தி பால்மிகு
பாடு களெலாம்ப டாவிடு கடையானேன்
பாழை யினிவேண்டி லேனிரு
தாளை யினியீந்தி டாயிது
பார மலகாண்க்ரு பாகா னலவோர்கீ
வேத வதிபேர்ந்து போயபின்
மாநி ருதனேங்கி யேகினன்
மீள வொருவேந்தன் வேள்விசெய் தலமேவி
வேத நெறியான்பு ரோகித
ஞரெ னலுநான்கு பேரனை
வீற டையவாங்கி னேனென நகையாடி
மாத மையன்வாழ்ந்த வாழ்வினை
நூறி யபிராந்த ஞேவென
மாம கமெலாங்கை யாடினன் அடல்வானோர்
வாடி மயில்கோம்பி யோதிம
வேறு ருவுசார்ந்து ளாரென
வாமு னிசொலீந்த தாலுணர் பெருமாளே. (27)

வடகிரியை மேவுகினு மேற்ற
சூராருலகை யேறுகினு மூர்த்தி
வருகயிலை சேருகினு மோட்டு மலர்வேதன்
வளர்பதவி கூடுகினு மீட்டும்
இரவிமுத லோரமரர் நாட்டு
வருகையொடு சாருகினு மாட்சி யெனலாமோ

படிறுவிடு மோபலவும் வேட்கை
நினைவுவிடு மோவரிது பாழ்த்த
பழையபடி யேயழுகி தாற்ற இதுமாறிப்
பதவிபெற நீயுதவி வாய்த்த
பரமபத மேறவழி காட்டு
பழியிலையு பாதியிலை மோட்ச மிதுவேகாண்

அடலரசன் வேள்விதனை நூக்கி
நிருதர்பதி மேவினவ யோத்தி
யனரணிய னூடுசமர் தாக்க அசுரேசன்
அவனைவிழ வேதிருகி யார்த்து
நகைபுரிய வேயெமது கோத்ர
மதனிலொரு தாசரதி போர்க்குண் மடிவாய்நீ

கொடியநிரு தாவெனலு நீக்கி
யமபதிய னேடுபொரு சூழ்ச்சி
கொளுவியொரு நாரதர்கை காட்ட யமன்மேலே
குறைவடா மானமுந டாத்தி
முடுகினனெ னுநிருத னுற்றல்
குறுமுனிவ னேதவது கேட்ட பெருமாளே (28)

குமுகுமென வோசைமிட ரூர்க்கவும்
மொழிகள்தடு மாறவும் விடாக்கலை
குலையவும்வி லோதமது வேர்க்கவும் அமுதூறு
குமுதவெழி னுவழகு காட்டவும்
வளைகதற மேகலைபி னூர்ப்பொடு
குழலளிகள் பாடுமொலி கேட்கவும் ஓருநாபி

யமுதுசுழி மூழ்கிவில காத்துடை
யிருகதலி மூலமது பார்க்கவும்
அவசமுறு மோககளை தாக்கவு மிருகாதில்
அடைசிவிளை யாடுகயல் சேப்பவும்
மதனகலை நூல்வழிவி யாத்திமை
யருளுமட வார்கலவி போற்றுகை தவிரேனோ

யமபுரியி லேறியவி ராக்கதன்
நாகிலளை வாரைமுத லேற்றினன்
எதிர்பொருத காவலரை யோட்டினன் யமராசன்
எருமைமிசை யேறியெதிர் தாக்கினன்
நிருதனும்வி டாதுகணை நூக்கினன்
எறிவனொரு நீள்கதையெ னுக்கொளு நமனார்முன்

கமலனனு காவிதுவெ லாப்படை
யெனமறலி நீடுகதை போட்டது
கபடநிரு தேசனெதிர் பார்த்தனன் இனிமீளாக்
கனவிசய மானதென மூர்க்கனும்
உரகருல கேறினனெ னுக்கதை
கடமுனிவ னோதவது கேட்டருள் பெருமாளே. (29)

மாதாவி னோடு தாதை யவரவர்
மூதாதை ஞாதி யான வழிவழி
மாதாம கேசர் மேலும் விளைபவர் அனைவோரும்
மாருமு வேழ தான தலைமுறை
யீடேறு மேவி டாம லரிகரி
மாமால்மு ராரி தேவ நரகரி ரகுவீரா

சீதா......................ராம னனுபவ
ஞசாநு வாகு தாச ரதிபதி
சேலாவ தார பூர்வ செனனென வுனைநாளும்
சீரோடு பாடி யாடி யுருகுத
லாயேப ராவி யாவி மகிழ்வுற
தேவாநு பூதி யார்பெ றினுமவ ரளவோதான்

பாதாள லோக போக வதிநகர்
நாகேச ஞன வாசு கியினெடு
பாகாய கேண்மை மேவி மணிதிகழ் நகரேபோய்ப்
பாரூடு போய்நி வாத கவசரொ
டீராறு மாத மோதி யயனிரு
பாலோரு மீள்க வாகை சமமென வருணேச
ஞதார வூரி லேகி யெதிருற
மாகால கேயர் மாள விளையதொ
ராபாதி கேள்வன் வீழ வமர்செய்து புனலோனு
மாளாண்மை தோல்வி யாக மறைபுக
நீள்பாலர் சாய நீச னடல்புனை
யாதாளி வாரி யூணர் சொலமகிழ் பெருமாளே. (30)

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1942-ஆம்௵ பிப்ரவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1942 பிப்ரவரி	வரவு 1941 பிப்ரவரி
I GENERAL SECTION:		
(1) மாதச்சந்தாவகையில் அடியிற்கண்டபடி வரவு:—		
(a) இராமநாதபுரம்எஸ்டேட்தர்ம மகமைபண்டிலிருந்து மாதச் சந்தா வரவு ... ரூ 100		
(b) புதுக்கோட்டை ஸ்டேட்டி லிருந்து மாதச்சந்தா வரவு ... ரூ 50		
ஆக ரூ 150	150	

விவரம்	செலவு 1942 பிப்ரவரி	செலவு 1941 பிப்ரவரி
I GENERAL SECTION:		
(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	120 8 ...	
(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	70	
(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	62 9 2	
(4) Stationery contingencies வகையிற் செலவு ...	4 10 4	

(2) பாங்குகளில் வட்டிக்குப் போட்டுள்ள தொகைகளுக்கு வட்டிவகையில்வரவு ...	437	11	...			
(3) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக் கட்டணத்தொகை வகையில் வரவு ...	11	14	...			
(4) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகை வரவு ...	30	...	...			
(5) Miscellaneous வரவு ...	2	7	...			
மொத்தம் ரூ ...	632	...	...	25577	5	6
II Editorial Section:						
(1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	8	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	15	12	6			

(5) சங்கம்புத்தகசாலைக்குவரும் பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும், புத்தகம்வாங்கியவகையிலும் செலவானது ...	24	13	...			
(6) தபால், தந்திவகையிற்செலவு	2	...	...			
(7) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு.	31	...	..			
(8) சங்கப்பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு ...	83	3	...			
மொத்தம் ரூ ...	398	11	6	25498	...	2
II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	80	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு	47	...	...			

(3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	5	1	9			
மொத்தம் ரூ.	28	14	3	54	8	...
III Press Section:						
(1) சங்கவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையில் வரவு	75	...	...			
(2) ஷை வேலைகள் சம்பந்தமாக பைண்டிங் கூலி வகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ. ...	78	...	...	57	...	...

(3) தபால், தந்தி வகையிற் செலவு. ...	7	...	...			
மொத்தம் ரூ ...	134	...	...	134	7	7
III Press Section:						
(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	38	8	...			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	...	8	...			
மொத்தம் ரூ. ...	39	...	...	41	7	6

ஆகமொத்தம் வரவு ரூ. ...	391	14	9	322	12	3	ஆக மொத்தம் செலவு ரூ.	673	6	6	581	14	10
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ...	4132	10	11	3611	13	3	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ...	*3851	3	2	3352	10	8
ஆகமொத்தம் ரூ. ...	4524	9	8	3934	9	6	ஆக மொத்தம் ரூ. ...	4524	9	8	3934	9	6

*By M. R. C. C. Bank Pass Bk. in current account. ... Rs. 3300- 0- 0
Amounts under suspense account. 99- 8- 0
Cash on hand Rs. 451-11- 2

3851- 3- 2

குறிப்பு:—மேலேகண்ட விபரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 3851—3—2 தவிர, ஆபீஸ் மூலதனங்களாக உள்ளவை:—மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்காக Fixed Deposit-ல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011-5-0. (2) ரூ. 1050. (3) ரூ. 1001; மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்காக Fixed Deposit-ல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000. (3) ரூ. 5000. காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ சா. சுப. ராம. நாராயணன்செட்டியாரவர்களின் ரங்கூன் அம்மேன் கடையில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள முதலும் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, Auditor, 10—4—'42.

LAKSHMINARAYANAN,
Manager, 2—4—'42.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1 ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2. கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3. *வளையாபதிச்செய்யுட்கள்			
4. புலவராற்றுப்படை	0	3	0
6. *நேமிநாதம் (உரையுடன்)			
7. திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8. திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9. அநுமானவிளக்கம்	0	10	0
10. அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11. *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12. *பன்னிருபாட்டியல்			
13. நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14. முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15. திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16. திருவாரூருலா	0	8	0
17. சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18. இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19. தேவையுலா	0	3	0
20. நரிவிருத்தம்	0	2	0
21. சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22. *திருக்கலம்பகம் (ஷை)			
23. *விக்கிரமசோழனுலா			
24. குருமொழிவினாவிடை	0	1	0
25. கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26. திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27. மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28. *சந்திராலோகம்			
29. *சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30. ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31. பாண்டியம்	0	4	0
32. மநீஷாபஞ்சகம்	0	8	0
33. வேளிர்வரலாறு	0	8	0
34. *அகப்பொருள்விளக்கம்			
35. *திருமந்திர நூறுபாட்டுக்குரை			
36. உவமானசங்கிரகம்	0	1	0
37. மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38. திருப்புல்லாணிமாலை	0	2	0
39. *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40. திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41. பொருட்டொகைநிகண்டு	0	6	0
42. அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	சந்திரகுப்தன்	0	6	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ. 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.